செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ 28௳, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புக-அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ௵ மாசி மீ ௨௨ வெள்ளிக்கிழமை (20-2-1970) [இல-௬௫

# நாவலர்பெருமான் கந்தபுராணசபையார் வழி காண்பார்களாக

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்



"இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளுஞ் சைவ சமயத்தில் உட்பற்றில்லாதவர் பலராயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே, கிறிஸ்து மதத்திற் புகுந்தவர்களுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையெனிற் கூறுதும்:

"எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தழுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தலகளினுல் இவர்களுள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம். இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்து சமய உபதேசியார் ஏறக்குறைய இருபத்தெட்டு வருஷத்துக்குமுன் நம்முள்ளே நாலவருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசியபோது 'பைபிள் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்த புராணத்து அவைபுகு படலத்தினும் அமைச்சியற் படலத்தினுமுள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத்தானும ஆற்ருது ஆற்ருது! என்ன அற்புதம் அற்புதம" என்று கண்ணீர் வாரஉரோமஞ் சிலிர்ப்ப மிகக ஆராமையோடு சொலலினர்'

'பாதிரிமார்கள், கிறிஸ்து மதம எத்தேசத்திற பரவினும பரவும்; யாழ்ப்பாணத்தில் உளளபடி பரவாது' என்று அநதரங்கத்திலே புலமபுகின்ருர்கள்

கநதபுராணமகிமைபற்றி நாவலர் அவர்கள் எழுதியவைகள் மேற் குறிப்பிட்ட வசனஙகள். 95 வருடங்களுக்கு மூன் எழுதிய

(வளர்ச்சி 2-ஆம் பகக்ம)

## பெரியபுராண விரிவுரை

யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலை முருகன் ஆலயத்தில் அங்கு வழிபாடு செய்யும் கைதிகளின் வேண்டுகோளின் பேரில் பெரிய புராணம்உபந்நியாசம் நடைபெறுகின்றது. சைவபரிபாலன சபை ஆதரவில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் நிகழ்த்தி வருகின்றர். ஆங்குள்ள கைதிகள் மிகுந்த ஆர்வத்தோடும் பக்தி சிரத்தையோடும் ஆலய வழிபாடு நடாத்தி வருகின்றனர். உபந்நியாசத்திலும் பலர் கலந்துகொள்ளுகின்றனர். ஒவ்வொரு போயா தினத்திலும் நிகழும் இவ் விரிவுரையில் நாளை இயற்பகை நாயனர் புராணம் நடைபெறும்.

## சிறந்த தொண்டர் சின்னத்தம்பிக்கு பாராட்டு விழா

கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ செல்வ விநாயக மூர்த்தி கோவில் தர்ம கர்த்தாவும், கொழும்புக் கதிர்காமத் தொண்டர் சபையினது முக்கிய உறுப்பினரும், தமிழ் இளைஞர்களுடைய நன்மையைக் கண்காணித்துவருபவரும் ஈழத்திலுள்ள சமூகங்களிடையே ஒற்றுமையை வளர்த்து வருபவருமாகிய இந்து மாமன்றக் காரியதரிசி ஆ. சின்னத்தம்பி அவர்களுக்கு அரசாங்கம் சமாதான நீதவான் பட்டம் வழங்கி அவரை கௌரவித்திருக்கின்றது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், 18-2-70 புதன்கிழமை மாலை 6மணிக்கு நடந்த பாராட்டு விழாவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் அவர்களுக்குப் பாராட்டுரை வழங்கினர்கள் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ. ஆர். பிரேமதாசா விழாவுக்குத்தலைமை வகித்தார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ந. நி)



திருவள்ளுவநாயனர்

## குருபூசை

வழமை போலத் திருவள்ளுவ நாயனர் குருபூசை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் சபை நாவலர் ஆச்சிரமத்தில் நடைபெறும். பகல் சிவபூஜா மண்டபத்தில் சிவ பூசை;நாவலர்மண்டபத்தில் நடராஜர்பூசை; திருக்குறட்டிருமுறைப்பூசை திருவள்ளுவமாலை ஓதல் மகேசுரபூசை நடைபெறும்; இரவு விரிவுரைக் கூட்டம் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம அவர்கள் தலைமையில் நடைபெறும். தமிழ் மறையோதல் மாணவ மாணவிகள் பேச்சுகள் நிகழ்ந்தபின் திரு. க. சிவராமலிங்கம் B. A திரு. ஷண்முக குமரேசன் B.A. ஆகியவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

X X X

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருந்திக்கழகத்தின்ஆதரவில் ஷை ஆலயத்தில் திருவள்ளுவர் தினம் 23-2-70 அன்று கொண்டாடப்பெறும். பஜனை, திருக்குறள் பாராயணம், உபந்நியாசம் என்பன நடைபெறும்.

## நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

உ

சைவ பரிபாலன சபை

நால்வர்கோவிற் திருப்பணி நிதி

## நன்கொடை

| | |
|---|---|
| முன் வரவு | 75-00 |
| திருமதி வ. அருளம்பலம் | 300-00 |
| திரு ஆ. தனபாலசிங்கம் | 300-00 |
| திரு க. கனகராசா | 300-00 |
| ஆக மொத்தம் | 975-00 |

திருமதி ம. அருணசலம்
தனதிகாரி,
சைவ பரிபாலனசபை
நால்வர்கோயிற்றிருப்பணிச்சபை

# யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்தை நிறுவுக

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அளித்த சாட்சியம்.

ஷை குழு உயர்கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி.பி.மலலசேகரா, டாக்டர் ஈ டபிள்யு அதிகாரம், திரு. R S சின்னத்தம்பி ஆகிய மூவரையும் உறுப்பினராகக் கொண்டது. 13-2-70 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பல்கலைக் கழகத்தை நிறுவுவது சம்பந்தமாக நேரடி வாக்குமூலம் பெறவந்துள்ள குழுவினர் பல்கலைக் கழகம் நிறுவுவதற்குரிய இடத்தை ஆராய்வதற்காக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கழகம், சுன்னுகம், இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிகளையும் அவற்றின் சுற்ருடல்களையும் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, இராமநாதன் அகடமி, சைவ வித்தியா விருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கலாச்சார அபிவிருத்திச் சங்கம், இந்து சமய அபிவிருத்திச் சங்கம் முதலியவற்றின் பிரதிநிதிகள் விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளித்தனர்.

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினது பிரதிநிதிகளாகச் சைவசித்தாந்த வித்தகர் திரு வே. நாகலிங்கம, முதலியார் செ. முத்துத்தம்பி, திரு. சிவ. உ. சோமசேகரம், திரு ஆ தனபாலசிங்கம், திரு. நம சிவப்பிரகாசம், திரு. ச செல்வநாதன், திரு. வை. இரகுநாத முதலியார், திரு சி. சிவகுருநாதன், திரு மு. மயில்வாகனம் சாட்சியமளிக்கச் சென்றனர் சாட்சியமளிக்கும் பேச்சாளராக ஆங்கில இந்து சாதனப் பத்திராதிபர் கடயாற்றிமைனர் அவர்கள் தெரிவித்த முக்கிய கருத்துக்கள்:

(அ) யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவபபடுதல் வேண்டும்; முன்னைய அரசாங்கங்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(ஆ) சுன்னுகம் இராமநாதன் கல்லூரியையும், பர

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## தில்லையம்பதியில் திருப்பணி

தில்லையம்பதி ஸ்ரீ நடராஜப் பெருமானின் "குஞ்சிதபாதத்திற்கு" ஆஸ்திக மக்களின் நன்கொடையால், காஞ்சி ஸ்ரீ காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள தில்லையம்பதியிலுள்ள 'தர்மபூஷணம்' திரு எஸ். இரத்தினசாமி செட்டியாரவர்கள்மூலமாக 'வயிர அங்கி'செய்து வருகின்ருர்கள் என்றும், வயிர அங்கிககு மேலும் வயிரங்கள் பச்சைகள்தேவைப்படுகின்றன என்றும், விருப்பமுள்ளோர் வயிரம் பச்சை கற்கள் கொடுக்கலாம் என்றும் இந்துசாதனத்தல் பிரசுரமான செய்தியைப் படித்துள்ள ஹைதராபாத் பொலாரம் மாது ஸ்ரீ. லட்சுமி ராமலிங்கம் என்ற அம்மையார், தில்லையம்பதியிலுள்ள "சாகித்திய கர்த்தா" பிரம்மஸ்ரீ வீ.வி சுவர்ணவெங்கடேச தீக்ஷிதர் அவர்கள் மூலமாக, காஞ்சியிலுள்ள ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளிடத்தில் "வயிர அங்கி"யில் பயன் பெற வேண்டி 54 வயிரங்களையும், காஞ்சி ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு சாற்றுப்படி செய்யும் பொருட்டு 25 பவுன் எடையுள்ள தங்கஒட்டியாணத்தையும் சேர்த்துசென்றவெள்ளிக்கிழமை காஞ்சி ஸ்ரீகாமாட்சிஅம்பாளுக்கு சாற்றுப்படிசெய்வித்தார்கள்,

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் மேற்படி தர்மகைங்கரியத்தை செய்வதற்கு, விமானம் மூலமாக சென்னை வந்து, அங்கிருந்து காஞ்சிக்கு வந்து மகிழ்ச்சியுடன் ஈடுபட்டுள்ளதைக் குறித்து அம்மையாரைப் பெரிதும் பாராட்டி ஆசியும் வழங்கியுள்ளார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)

காலம் பெறுமதியானது துரித சலவைக்கு-
மில்க் வைற்
சலவைப் பவுடர்
பாவியுங்கள்.
பாவித்த வெற்றுறைகளைச்சேகரித்து
பரிசுகளைப்
பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

காஞ்சிபுரம் தொண்டைமண்டல மெய்கண்டாராதின குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் [illegible] இந்துக்கல்லூரியில் 22-2-70, 23-2-70 ஆகிய இரு தினங்களிலும் சைவ சமய விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஞூ மாசி மீ க-உ வெள்ளிக்கிழமை [1970

## மக்கள் பீதியடைகின்றனர்

தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தினருடைய தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன் மன்னாரில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றினால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இரு இராணுவத்தினர் கொலையுண்ட சம்பவம் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அதன் பின்பு அங்கு பொதுமக்கள் வீதிகளில் நடமாடவும், தங்கள் கடமைகளைப் புரிய வெளியேறுமலும வீடுகளில் அஞ்சி வாழ்கின்றனர். பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செலலப் பீதிகொண்டுள்ளனர். வடமாகாணத்தில் இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலேற்பட்ட கலவரத்தினால் பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். வல்வெட்டித்துறையிலுள்ள மக்கள் தங்கள் கடமைகளுக்குச் செல்லவும், கடற்றொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்குச் செல்லவும் அஞ்சுகின்றனர்

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டுமென்ற தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வருதற்கு வடபகுதியிலுள்ள எல்லா அரசியற் கட்சிகளும ஏகோபித்திருக்கின்றன. இராணுவத்தினரோ பொலிஸ் பகுதியினரோ நாட்டில் பொது மக்களுடைய நலனுக்காகவே உழைக்க வேண்டியவர்கள். அக்கடமையை மறந்து அவர்கள் பொதுமக்களுக்கு உறுகண் விளைக்க முன் வரின் அது வேலி பயிரை மேய்ந்த தன்மையை யொக்கும். நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலை நாட்டும் நோக்கத்தையுடைய எங்கள் பிரதம மந்திரி இவ் விஷயத்தில் உடனடியாக ஒரு சுமூகமான நடவடிக்கையைக் கையாளுதல் வேணடும். வடக்கிலுள்ள இராணுவத்தினரை உடனடியாக அகற்றி கள்ளக் கடத்தலைத் தடுக்கும் கடமையைப் பொலீசாரிடம் ஒப்படைக்கலாம்.

பொது மக்களுக்குப் பகைவரால் கள்வரால் துட்ட மிருகங்களினாலதன்னும் வருகின்ற துன்பங்களை அரசன் நீக்க வேண்டுமென நீதி நூல்கள் கூறுகின்றன. மன்னாரிலும் வல்வெட்டித்துறையிலும் நிகழ்ந்த இராணுவத்தினருடைய அட்டூழியங்களைப்பற்றி அரசாங்கம் ஒரு விசாரணையை நடத்துதல் அவசியமாகும். இனிமேல் இவ்விதமான அட்டூழியங்களைத் தவிர்த்தல் அரசாங்கத்தின் கடமையாகும்.

---

## கந்தபுராண நூற்காட்சி

### ( நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் )

14-2-70 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கந்தபுராண நூற் காட்சியைத் திறந்து வைத்த பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக் காரியதரிசி திரு. ஆ. தனபாலசிங்கம் முன்னுரையாகக் கூறியவை:- கந்தபுராண படனம் நாடெங்கும் நிகழவேண்டும். சைவ சித்தாந்த அடிப்படையைக் கொண்ட கல்வி பிள்ளைகளுக்கு ஊட்டப்படுதல் வேண்டும். அதற்கு கந்த புராண படனம் உறுதுணையாகவிருக்கும். மங்கி வருகின்ற கந்தபுராணத்துக்குப் புத்துயிர்கொடுக்க முன்வந்துள்ள நாவலர்பெருமான் கந்தபுராணசபையை நாங்கள் பாராட்டுதல் வேண்டும்''.

''யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினது நாவலர் ஆச்சிரமம் கந்புராண படனத்தையே குறிக்கோளாகக் கொண்டு நிறுவப்பட்டது கம்பருக்கும், சேக்கிழார்நாயனருக்கும் விழாவெடுத்தமை போல கச்சியப்பசிவாசாரியாருக்கும் விழாவெடுபபது பொருத்தம். அத்தொண்டினை நாவலர் பெருமான் கந்தபுராணசபை நிறைவேற்றி வைக்கின்றது'' என யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைச் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் நூல் விற்பனையை ஆரம்பித்து வைக்கும்பொழுது குறிப்பிட்டனர். விற்பனைக்கு வைக்கப்பட்ட நூல்களில் ஒரு பிரதியை திரு. அ. நாகலிங்கம் அவர்கள் முதலாவதாக விலைக்குப் பெற்றனர்.

மாதகல், வித்துவான் பொன். கந்தசுவாமி அவர்களும் மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலில் கந்தபுராண படனம் வருடந்தோறும் கிரமமாக நடைபெற்று வருவதாகவும், அக்கோவிலில் மாதகல். மயில்வாகனப் புலவர் பார்வையிட்ட கந்தபுராண ஏடொன்று இருப்பதாகவும் கூறினர். நூற்காட்சிச் சாலையில் 300 வருடங்களுக்கு முன்னர் எழுதி, மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவிலில் படிக்கப்பட்ட புராதன ஏடும் வைக்கப்பட்டிருந்தது. மீசாலை திரு கு. வி. மகாலிங்கம் அவர்கள் கந்தபுராண மகிமையைப் பற்றியும் மீசாலை, சங்கீத பூஷணம் சைவப்புலவர் திரு. அ கி. ஏரம்பமூர்த்தி அவர்கள் கந்த புராணக்கலாசாரம்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

இவ் விழாவுக்கு நாவலர் பெருமான் கந்தபுராண சபைத் தலைவர் திரு. வை. இரகுநாதமுதலியார் தலைமை வகித்தனர். காரியதரிசி வித்துவான் க கணபதிப் பிள்ளை யாவருக்கும் நன்றி கூறினர். ——

---

## தவத்தின் பெருமையை விளக்கும் நூல்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரியம்பாள் ஆலயத்தில் கந்தபுராணவாரத்தை முன்னிட்டு நிகழ்ந்த கச்சியப்ப சிவாசாரியர் குரு பூசை விழா நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் கழகத் தலைவர் திரு க. சொககலிங்கம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தபோது சைவப்புலவர் சி. பொன்னம்பலம் அவர்கள் ''கச்சியப்பரும் கந்த புராணமும்'' என்னும் பொருளில் உரை நிகழ்த்தினர். அவரது பேச்சின் ஒருபகுதிவருமாறு:-

''கந்த புராணத்தில் இரு பெரும் தத்துவங்கள் பிரதானமானவையாகக் கூறப்படுகின்றன

1. தவத்தின் மகிமை
2. செய்த வினையை அனுபவித்தே தீரவேண்டும்.

சூரன் பெருந் தவம்செய்து 1008 அண்டங்களையும் 108 யுக காலம் ஆட்சி செய்யும் வல்லமையைப் பெற்றான். தக்கனுடைய வேள்வியில் தக்கனால் கூறப்பட்ட சிவநிந்தனை கேட்டதின் பயனாகத் தேவர்கள் பெருந்துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தது.

சூரனால் தேவர்கள் சிறையிடப்பட்டனர். மீன் சுமந்தனர். இந்திரனின் மகன் சிறைப்பட்டான். இவ்வாறாகத் தேவர்கள் பட்ட துன்பத்துக்குச் சூரன் குற்றவாளியல்ல. சூரன் எய்யப்பட்ட அம்பு எய்தவன் வேறு. அம்பை எய்தவர்கள் தேவர்கள். தேவர்கள் தாம் தக்கன் வேள்வியில்சிவநிந்தனைகளைக் கேட்ட அதிபாதகத்தால் வருந்தினார்கள். சூரன் அதற்கு ஒரு அம்பாக உபயோகிக்கப்பட்டவன்.

சூரனுக்கு அவ்வாறு பாவம் புண்ணியம் என்றிரண்டு இல்லை என உபதேசம் செய்தவர் சுக்கிராச்சாரியார் சுக்கிராசாரியரின் பிழையான மாயாவாத உபதேசத்தைச் சூரன் பின்பற்றினான், தேவர்கள் புரிந்த அதி பாவத்தின் பலனை அவர்கள் அனுபவித்தே தீரவேண்டும்.

இன்னும் ஒரு ஆன்மாவுக்கு இறுதியில் கிடைக்கும் அதியுயர்ந்த பேறு முத்தியாகும். அம்முத்தி சூரனுக்குக் கிடைத்தது. அதுவுட இறைவனே 12 தோளும 6 திருமுகமும் கொண்டு தமக்குச் சமானமுள்ளவனாகக் கருதி போருக் கெழுந்தருளி வருமாறு அழைத்தார். சூரன செய்த தவத்தை எம்மால் நினைக்கவும் முடியுமோ என்று கச்சியப்பசிவாசாரியாரே கூறுகின்றார்'' அடுத்து, நல்லூர் சாதனா பாடசாலை ஆசிரியர் திரு. ச. சதாசிவம் அவர்களும், கழகச் செயலாளரும் உரை நிகழ்த்தினர்.

---

## யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ......

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

மேஸ்வராக் கல்லூரியையும் அவற்றின் சொத்துக்களையும் பல்கலைக்கழகம் அமைப்பதற்குரிய இடங்களாகக் கொள்ளலாம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கும், கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிறசிக் கழகத்துக்கும் அருகில் வேண்டிய வேறு நிலங்களைப்பெறறுக் கொள்ளலாம்.

(இ) யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பில் 3000க்கு மேற்பட்ட மாணவர்களும், கிழக்குமாகாணத்தில் 93 மாணவர்களுமேகலவிபயில்கின்றார்கள்; கூடிய மாணவர்கள் உள்ள இடத்திலேயே பல்ககலைக்கழகம் நிறுவப்படுதல்வேண்டும்.

(ஈ) யாழ்ப்பாணத்தில் நல்ல தண்ணீர் இல்லையென்பது தவறான கூற்று. திருநெல்வேலியில் ஒரு ஏக்கர் நிலததில் தோண்டப்பட்ட கிணறுகளே யாழ்ப்பாணப் பட்டினம் முழுவதற்கும் குடிதண்ணீர் உதவுகின்றது.

(உ) காசியிலுள்ள இந்துச் சர்வகலாசாலையினது அமைப்பிலே இங்கு நிறுவப்படும சர்வகலாசாலையும் அமையலாம பிறமதத்தவர்களும கல்வி பயின்று கொள்ளலாம அதனால இன ஒற்றுமை விருத்தியாகும்.

(ஊ) யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம நிறுவப்படுதல் கொழும்பு, பேராதனை வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்களில் இடநெருக்கடியையும் மாணவமாணவிகளின் வசிப்பிடந் தேடும் கஷ்டங்களையும் அங்கு காணப்படும் ஒழுக்கக்குறைவுகளையும் குறைத்துவிடும்

(எ) யாழ்ப்பாணத்தில் பல்ககலைக்கழகத்தை அமைப்பதை முக்கியமாக எதிர்க்கின்றவர்கள் இந்து சமயத்தில் பற்றில்லாதவர்கவ். அரயல் நலனைக் கருதியே அவர்கள் கடமை புரிகின்றனர்.

(ஏ) யாழ்ப்பாணம் பாரம்பரியமான கல்விமான்களும புலவர்களும வாழ்ந்துவந்திருக்கின்றனர், தமிழரசர்கள் தமிழ்ச் சங்கத்தை நிறுவி கலாசாரத்தையும் தமிழ் மொழியையும் போற்றிவந்த இடம யாழ்ப்பாணம்.

சைவ வித்தியா விருத்திச்சங்கச் சார்பில் சென்ற பிரதிநிதிகளுக்கும், இராமநாதன் அகடமி பிரதிநிதிகளுக்கும் திரு. எஸ்.ஆர். கனகநாயகம் தலைமை வகித்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கலாசார அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கு திரு. சிவ. உ. சோமசேகரம் தலைமை வகித்தனர்.

---

## நாவலர் பெருமான் கந்தபுராண சபையினர் ......

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

யாழப்பாணச் சமய நிலையில் இவ் வசனங்கள் வருகின்றன.

நூறுவருடங்களுக்குமுன் கந்தபுராண ஊற்று ஆலயந்தோறும் உற்பத்தியாகி ஆண் பெண் இருபாலார் உள்ளத்திலும் பெருக்கெடுத்தது. அவர்கள் இரத்தத்தில் கந்த புராண கலாசாரம கலந்திருந்தது இப்பொழுது அப்படிச்சொல்ல முடியாது. கந்தபுராண பரம்பரை அருகி வருகின்றது. வருஞ் சந்ததிக்குக் கந்தபுராணம புதிது. கந்த புராண யாழ்ப்பாணம் இங்ஙனம் ஆகுமானால், இந்தியாவின் நிலை எங்ஙனமாகும்!

''இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளுஞ் சைவ சமயததில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும'' என்று, நாவலர்பெருமான் அன்று எழுதிய இநதயா, இன்று நாஸ்திகம் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றது.

மிண்டிய மாயாவாதமென்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து
ஆர்க்க
உலகாயதன் என்னும்
ஒண்டிறற் பாம்பு
கலா பேதத்த கடுவிடம்
கான்று.

பலவேறு வண்ணங்களிற் படம் விரித்து வருகின்றது உலகாயதம் – நாஸ்திகம்.

நாஸ்திகப் பாம்பு நமது நாட்டை எட்டுகின்றது எட்டி விட்டது!

நாமோ கந்தபுராணத்தை மறந்துவிட்டோம். நாவலரைப் பெயரளவில்வைத்திருக்கிறோம்.

நமது சமய நிலை அரிவரியிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

'நாவலர் பெருமான் கந்த புராண சபையார்', கந்த புராண கலாசார ஊற்று நமது நாட்டில் பழமை போலப் பெருக்கெடுக்க வழி காண்பார்களாக.

கலியுக வரதராகிய சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கிடைப்பதாக.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் திருவடிகளை அருமையறிந்து வழுத்துந் திருநாள் அணுகுவதாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

தத்துவ வழக்கு இலக்கம் 2326/T

மரணசாதனம் எழுதாதிருந்து காலஞ்சென்ற காரைநகர் களபூமியைச் சேர்ந்த கதிரவேலு நடராசாவின் மனைவி நாகேஸ்வரி என்பவர் விட்டுச்சென்ற சொத்துடமைகள் மேற்படி சொத்தின் சொந்தக்காரி நாகேஸ்வரி இறந்துவிட்டார்

கதிரவேலு நடராசா, களபூமி, காரைநகர் –தத்துவகாரன்

VS

மைனர் 1. கதிரவேலு நடராசா மகள் சோதி
2. வேலாயுதர் திருநாவுக்கரசு வழக்கில் பராமரிப்புக்காரன் ( Guardian adLitem)
வட்டுக்கோட்டை மேற்கு, —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் 2326/T இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி காலஞ்சென்ற நாகேஸ்வரியின் கீழ் விபரிக்கப்படும் சொத்துடமைகளை 1970 ஆண்டு பங்குனி மாதம் 2-ம் திகதி முற்பகல் 9–30 மணி தொடக்கம் மாவட்டக்கோட்டு வழவில் கோட்டார் முன்னிலையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்பட்டு மேற்படி பணம் கோட்டில் கட்டப்படும்.

பொருள்களின் அட்டவணை

1 ஒருசோடி காதணி ½ தங்கப்பவுண் Sovereigne
2. இரண்டுசோடி காப்புகள் 3¼ ,, ,
3. ஒரு கல்லட்டிகை Necklace 3¼ ,, ,,
4 ஒரு பெண்கள்கட்டும் கைக்கெடிகாரம் Lady's wrislet
5. ஒரு சங்கிலி பதக்கத்துடன் 7½ தங்கப்பவுண் Sovereigne

"கமலபதி" மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி, கொமிசனரும், விலைமதிப்பாளரும்
மண்டைதீவு. 11-2-70 எம். 420 20—2—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரையூர், யாழ்ப்பாணம். (1) டாக்குத்தர் லூக் சூசைப்பிள்ளையும் (2 பெண் ருணி லூக்கும் வழக்காளிகள்
இல: M. B. 7036 எதிராக
கரையூர், யாழ்ப்பாணம். (1) நீக்லாபிள்ளை ஜோக்கிம்பிள்ளையும் (2) பர்நாந்து நீக்லாபிள்ளையும் – எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 7036-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஞு பங்குனி மீ 21-ம்திகதி (21-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல வட்டி ரூபாய் 3684/- இன்னும் ரூபாய் 2500/–த்துக்கு 10–11–64 தொடக்கம் 16–9–67 வரைக்கும் 12% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 341–51 சதம். செலவில் ரூபா 125/– கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை "இளந்தையன் குடியிருப்புக அங்கிதன் தறையுட" பர. நில. இலா. ⅞ வீடு, கிணறு, குடினி செய்பயிர் வான்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும், இதற்கெல்லை கிழக்கு ஞானப்பிரகாசம் பெண் எலிஸபெத்தினுதனம், வடக்கு ஸ்பஸ்தியாம்பிள்ளை பெண் ருஜேஸ்வரியினுதனம் மேற்கு றெயில் றோட், தெற்கு மேரி ஜோஸபையினுதனம். இதடங்கலுமதைச் சேர்ந்தவைகளும் பதிவிலக்கம D. 258/297 தொடர்பு D. 297/239

133 பருத்தித்துறை றோட்டு, செ. விசாகரெத்தினம்,
நல்லூர், யாம்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
14—2—70 எம். 424 20—2—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

என். ருஜா கைம்பெண் சுந்தரம், மாவிட்டபுரம்
(காலஞ்சென்ற ருாஜவினுதங்களின் தத்துவகாறி)
வழ. இல. M. B. 7217 எதிராக பதில் வழக்காளி
1. வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
2. பெண் கனகம்மா, விமன்காமம், தெல்லிப்பளை.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 7217ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1970-ம் ஞு பங்குனி மீ 28-ஆம் திகதி (28–3–70) சனிக்கிழமை காலை 9–30 மணியளவில அவ்வக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில என்னால் விற்கப்படும.

தீர்வைத்தொகை:. முதலும் வட்டியுமாக ரூபா 3862–50 சதமும் இன்னும் 3000/- ரூபாவிற்கு 26-1-65 — 2-12-65 பத்து வீத வட்டியுங் கூட்டிக் கூடிய தொகைக்கு முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் ஐந்து வீதவட்டியும் செலவு ரூபா 475–62 சதமும். இதில் ரூபா 2000/- போக மிகுதி

ஆதனங்களின விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி-வடக்குப் பகுதி தெல்லிப்பளைக கோவிற் பற்று விமன்காமம் இறை விராவளை பர நி லா. 5 குளி 5¼ வான்பயிர்களும் எல்லை கிழக்கு முருகர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்கும், வடக்கு முருகர் சண்முகமும் மறு, மேற்கு வேலுப்பிள்ளை சுப்பையாவும் மறு தெற்கு ஒழுங்கை. இதடங்கலில் சொரியலாய் அரைவாசியும், தென்மேற்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புருத்தும்

2, ஷையிறை. "காட்டுத் தம்பாவத்தை" பர. நில. லா. 7. எல்லை கிழகது கந்தப்பிள்ளை முருகேசு, வடக்கு கார்த்திகேசு சோமசுந்தரமும் பங்காளரும், மேற்கு வைத்திலிங்கம் கைம்பெண் இளையபிள்ளையும் மறு தெற்கு கந்தப்பிள்ளை முருகேசுவும் பங்காளரும், இதடங்கலில் சொரியலாய் 1/3 பங்கு.

3. ஷையிறை "காட்டுத தம்பாவத்தை" பர, நில. லா 7. எல்லை இழகது ஒழுங்கை. வடக்கு செல்லப்பா சின்னத்துரையும் சகோதர, சகோதரிகளும், மேற்கு தம்பையாவும் மறு, தெற்கு கந்தபபிள்ளை சின்னகுட்டி, இதடங்கலிற் சொரியலாய் 3/7 பங்கும அதற்குரியவைகளும்.

4. ஷையிறை 'தலைசாட்டியு கப்பமியும், வடலி சீமாவும்" பர. நில. லா. 17 3/4 பனைகளும், வடலிகளும வடக்கெல்லையிலிருக்கும் வேம்பிற் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் மூத்த தம்பி சிவசம்புவும், சகோதர சகோதரிகளும், வடக்கு சுப்பிரமணியம் செல்லத்துரையினுருமைக்காரர், மேற்கு கதிரவேலு நவரத்தினமும் மறு, தெற்கு செல்லப்பா சின்னத்துரையும் மறு இதடங்கலிற் சொரியலாய் 1/10 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1 யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 403 20–2–70
3—2—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தம்பையா இராசரத்தினம், நீர்வேலி —வழக்காளி
வழ: இல M B 7395 எதிராக
சின்னத்தம்பி கதிர்காமர் உடுவில் கிழக்கு —எதிராளி

யாற்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8347-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 4 துண்டுக்காணிகள் 1970-ம் ஞு பங்குனி மீ 14-ம் திகதி (14-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4208–23ம் 11–5–65 தொடக்கம் 2–11–67 வரைக்கும் ரூபா 3000–00க்கும் 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 322–04

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "மாசியப்புலம் கொட்டையடி" நிலம்பரப்பு 10ம, வடக்கு எல்லையில இருக்கும் கிணற்றிலும் தூர்வையிலும் அரைவாசிப் பங்கும் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் மாரிமுத்துவிற்கும் பங்காளருக்கும உரிய ஆதனம், வடக்கு ஆறுமுகம சரவணைக்கும் பொன்னு பெண் செல்லமுத்துமுரிய ஆதனங்கள், மேற்கு சின்னத்தம்பி பெண் சின்னத்தங்கத்தின ஆதனம், தெற்கு கையொழுங்கை இதடங்கள்ளும் இதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் 1/3 பாகம்.

2. ஷை இணுவில் இறை "அளவிடை" நிலப்பரப்பு ⅞ம், பனைகளும. இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும முருகேசர் அப்புக்குட்டியின் ஆதனம. மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னத்தம்பி கந்தரின் உரிமைக்காரின் ஆதனம், இடங்களிலும் இதைச் சேர்ந்தவைகளிலும் 1/3 பாகம்

3. ஷை இணுவில் இறை "அளவிடை" நிலப்பரப்பு (3) மூன்றும் வடக்கு எல்லை காணியில இருக்கும் கிணற்றில் பங்கும வழக்கமான வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும, தெற்கு எல்லையில் இருக்கும புளியமரத்தில பங்கும. இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் சின்னச்சியின் ஆதனமும், ஒழுங்கை முகப்பும. வடக்கு முருகேசர் அப்பாக்குட்டியின் ஆதனம், மேற்கு முருகேசர் அப்பாக்குட்டிக்கும் நாகநாதர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு கந்தர் வயிரமுத்துவிற்கும கதிர்காமர் சின்னப்புவிற்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிலும் அதைச் சேர்ந்தவைகளிலும சொரியலாய் 6/10 பாகத்தில் 1/3 பாகம அதாவது 1/5 பாகம்.

4. ஷை இணுவில் இறை 'தேளர் ஒல்லை" நிலப்பரப்பு 4ம. கிணறும் செய்பயிர்வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு செல்லப்பா பெண் சின்னச்சியின் ஆதனம், வடக்கு சின்னப்பு சுப்பரின் ஆதனம், மேற்கு அடிப்பாதையும். அப்பாதை முகப்பும, தெற்கு முருகர் இளையதம்பியின் ஆதனம். இடங்கலிலும் இதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் 1/3 பாகம்,

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 15-1-70, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 419 20-2-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 8282
வட்டுககோட்டை மேற்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் சபாபதிப்பிள்ளை —வழக்காளி
வட்டுக்கோட்டை மேற்கு தற்போது தொப்பிதோட்டம்
1. வேலாயுதம்பிள்ளை தியாகராசாவும் பெண்
2. நாகரத்தினமும்
பதில் வழக்காளிகள்
எதிராக
மூளாய்
1. கதிரவேலு சுப்பிரமணியமும் பெண் 2. சிவபாக்கியமும்
3. சுப்பிரமணியம்திருநாவுககரசு
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு M. B. 8282-ஆம் இலகக வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க் காணும் மூன்று துண்டுக் காணிகள் 1970-ஆம் ஞு மார்ச்சு மாதம் 25–ம் திகதி புதன்கிழமை (25-3–70) முற்பகல் 9–30 மணி தொடக்கம் அவ்வக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1. தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1600/— இன்னும் 6-7-1966 தொடக்கம் 25-1-1968 வரை 12% வட்டியும் அதன் பின் கூடிய தொகைக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 287-84.

ஆதனங்களின் விபரம்

வடமாகாண யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற் பற்று மூளாய் இறை "பாலை வட்டக் காடு" நெ. பர. 5. எல்லை கிழகது செல்லப்பு பெண் தங்கம்மாவின் ஆதனம் வடக்கு சுப்பிரமணியம் சிவப்பிரகாசத்தினுதனம் மேற்கு அம்பலவாணர் தம்புவினுதனம் தெற்கு கார்த்திகேசு பெண் வள்ளியம்மையினுதனம் இதடங்கலும் இன்னும் பிரமன்புலம் என்னும் காணிக் குள்ளிருக்கும குளத்தில் பங்கும் தூர்வை வழி வாய்க்கா லுரித்தும் பதிவுஇல E326/47.

2. ஷை மூளாய் இறை "பாலை வட்டக்காடு" நெ. பர 1, 5/8 எல்லை கிழககும் மேற்கும் வேலு கார்த்திகேசுவினுதனம் வடககு கார்த்திகேசு பெண் வள்ளியம்மையினுதனம் தெற்கு நாகர் அம்பலவாணரின் உரிமைக் காறரின் ஆதனம் பதிவு இல E 174/246.

3. ஷை மூளாய் இறை "பாலை வட்டக் காடு" நெ. பர 5 எல்லை கிழக்கு வயிரமுத்து செல்லப்புவுக்கும் சின்னப்பு அப்புத்துரையின் உரிமைக்காரருககுமுரிய ஆதனம் வடக்கும் தெற்கும் சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியத்தினுதனம் அதாவது வடக்கே முதலாம் காணியும் தெற்கே இரண்டாம் காணியும் மேற்கு கதிரவேலு ஆறுமுகத்தினுதனம் பதிவு இல E 239/161.

செ. இரத்தினசபாபதி J.P.
கொமிசனரும்விலைமதிப்பாளரும்.
ஸ்ரேசன் றோட்டு,
கோண்டாவில், 12-2-70.
எம். 425 20–2–70

"சொல்லுக சொல்லைப்
பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து'
—குறள்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 9285
வ. மாணிக்கம் கைம் பெண் யோகம்மா கரம்பன், ஊர்காவற்துறை —வழக்காளி
எதிராக
முருகேசு நாகரத்தினம் வேலணை மேற்கு, வேலணை

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 9285-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 3 துண்டுக்காணி 1970-ஆம் ஞு பங்குனி மீ 23-ஆம் திகதி (23–3–70) திங்கட்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபாய் 5000/-ம் 31-7-67 தொடக்கம் 26-8-68 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 478/51- இதில் ரூபாய் 175/- கழிக்கவும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தீவுப்பகுதி. வேலணை கோவிற்பற்று, வேலணை மேற்கிறை 'சிறு நாயக்கன் சாட்டி' பிரிவுகளில் நிலப். பர 15¾ (பதினைந்தே கால்) வீடும் பனை வடலி தென்னைகளும் மற்றும் செய் பயிர்களும் வான் பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசு கைம்பெண் செல்லாச்சியின் ஆதனம், வடக்கு முருகேசு கந்தையாவிற்கும் மறு பேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சின்னையா பெண் வள்ளியம்மைக்கும் மறு பேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு அப்புத்துரை பெண் அன்னப்பிள்ளையின் உரிமைக்காரரினுதனங்களும் இதடங்கலும்

2 ஷை இறை 'சிறு நாயக்கன் சாட்டி' பிரிவுகளில் நில' பர. 7½ (ஏழரையும்) பனை, வடலி, தென்னை, கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் செல்லத்துக்குமுரிய ஆதனம், வடக்கு மேலே சொல்லிய முதலாம் ஆதனம். மேற்கு பின்னால் காணும் நாலாம் ஆதனம், தெற்கு முருகன் கந்தையாவின் ஆதனங்கள். இதடங்கலும். ஆனால் குறித்த கிணற்றில் தெற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் தூர்வை இறை வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல்.

3. ஷை இறை 'சிறு நாயக்கன் சாட்டி' பிரிவுகளில் நில. பர. 11 1/2 (பதினொன்றரையும்) பனை வடலிகளும், வேம்புகளும் எல்லை கிழக்கு எனக்கு (பிரதிவாதி) முரிய ஆதனம். வடக்கு எனக்கும் (பிரதிவாதிக்கும்) மறு பேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு அப்புத்துரை பெண் அன்னப்பிள்ளையினுரிமைக்காரருக்கும் மறு பேருக்கு முரிய ஆதனங்கள். தெற்கு முருகன் கந்தையாவின் ஆதனம் இதடங்கலும்.

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
"வேல் பதி" 25–1–70
புத்தூர் எம். 416, 20-2-70

---

### பிழை திருத்தம்

13-2-70ஆம் தேதி வெளிவந்த இந்துசாதனத்தில் M. B. 4900 இலக்க வழக்கில் ஆதன விபரத்தில் இக் காணி நி. பா. 3 குளி 13. 16 என்று இருப்பதை பரப்பு 3 குளி 13, 13/16 என்று திருத்தி வாசிக்கவும்.

x x x

13–2–70 இந்து சாதனத்தில் வெளிவந்த கோட்டு விற்பனவு விளம்பரத்தில், M B 8849 ம் இலக்க வழக்கில் ஆதன விபரத்தில், இதை சுடலையடியிற் புலமும் என்று கூறப்படும் என்றிருப்பதை சுடலையடியிற் புலமும் மறு பிரிவுகளும் சுடலையடிவளவும் சுடலையடிற் புலமும் என்று சேர்த்து வாசிக்கவும்.

x x x

23-1-70 இந்து சாதனத்தில் வெளிவந்த பருத்தித்துறை கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரத்தில் இல: 9759 விற்பனவு திகதி 12–2–70 என்றிருப்பதை 12–3–70 என்று திருத்தி வாசிக்கவும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. M B 8718

வண்ணை, யாழ்ப்பாணம்.

வல்லிபுரம் நல்லையா

—வழக்காளி

எதிராக

வண்ணை, யாழ்ப்பாணம்.

இராமலிங்கம் நடராசா

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8718-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஞூ பங்குனி மீ 16ஆம் திகதி (16-3-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 7640-00ம். 2-1-67 தொடக்கம் 7-10-67 வரைக்கும் ரூபாய் 5000-00க்கு எட்டு வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 345-20 சதம் — இதில் ரூபாய் 3150/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலாகம் கோவிற்பற்று ஏழாலை இறை 'ஊறுத்துவளை' பர. நி. இல. முண்றரை (பர. நி. இல. 3½) கிணறு வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இந்தப் பர. நி. இல. 3½க்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ரோட்டு, மேற்கு வயித்திலிங்கம் பெண் பாக்கியத்திற்குரிய ஆதனம், தெற்கு இவ் ஈட்டுக் கடன்காரருக்குரிய ஆதனம், இதடங்கலும் மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணறு, ஆடுகால் துலா தூர்வை ஆகியவற்றில் இதற்குரிய பாகமும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதன்பதிவு H. 331/170

வை. ஏரம்பமூர்த்தி

கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

காரைநகர்.

1970-ம் ஞூ தைமீ 21ம௳

M. 426 20—2—70

இல: 16676

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கட்டுவன், கதிரித்தம்பி கைம்பெண் சின்னச்சி —வழக்காளி

எதிராக

தெல்லிப்பழை கிழக்கு,

1. ஐயங்கன் செல்வராசா
2. பெண் பாக்கியம்

—எதிராளிகள்

மல்லாகம் டிக்கிவெஸ் கோட்டில் 16676-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 9-ம் திகதி (9-3-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 745/-உ இதில் ரூபாய் 500/-க்கு 25-11-68 திகதி தொடக்கம் 15-8-69 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 48-75 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடகஞப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை "தல்லயப்புலம்" நிலப் பரப்பு மூன்று (3௧) வயிரமுத்துவின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு அப்பாத்துரை கைம்பெண் சரஸ்வதிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு ஒழுங்கையும் கணபதி கந்தனின் ஆதனமும், மேற்கு கந்தன் கணபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு சடையன் கந்தனின் ஆதனம், இதடங்கலும். முற்பதிவு H. 342/153

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

தெல்லிப்பழை, 5-2-70

M 415. 20-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

மானிப்பாய்; நமசிவாயம் செல்வதுரை —வழக்காளி

M. B. 8011

எதிராக

1. பந்தியடி சுதுமலை செபஸ்தியான் சவரிமுத்து
2. டிட் யூர் பெண் பதுமாவதி
3. டிட் யூர் காலஞ்சென்ற தொமஸ் அல்லது தொம்மைப்பிள்ளை செல்லத்துரை
4. டிட் யூர் செல்லத்துரை கைம்பெண் புத்திரசிகாமணி அல்லது றிபெக்கா காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை செல்லத்துரையின் ஆதனங்களின் தத்துவகாரி

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B. 8011-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1970-ம் ஞூ பங்குனிமாதம் 18-ம் திகதி (18-3-70) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:- முதல்வட்டி ரூபா 1333/-ம் 21-2-66 தொடக்கம் 11-3-67 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 368-71 சதம்

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "நாலுவராக்காடு" நில. பர. 3, 3/8 இதில் கிழக்குப் புறமாக நில. பர. இரண்டு (2) வான் செய்பயிர்களும் எல்லை கிழக்கு: இராசதுரை மகன் மேரி இடுமேட்டாவின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளையினுதனம, மேற்கு சூசைப்பிள்ளை சுந்தையாவினுதனம். தெற்கு மூன்றுமுழவகலக் கையொழுங்கை, இதடங்கலும் மிகுதிக் காணியிலும் மறுகாணியிலும் உடுத்திருக்கும் கிணற்றில் அதற்குரிய பங்கும் தூர்வைப் பாவிப்புரித்தும் மிகுதிக்காணியின் வடக்கெல்லையோரமாக கிணற்றுக்குப் போக்குவரவு செய்வதற்காக மூன்று முழவகல வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் (வழக்கெல்லைக் காணிக்காரி ஆதித்த கிணற்றிற்கு போக்குவரத்து செய்ய மூன்றுமுழ வகலவழிவாய்க்கால் பாவிப்புரித்து பிற நீங்கல்)

2. மேற்படி சுதுமலையிறை "சோதிமலை" நில. பர. ஒன்று (1), குழி மூன்றரை (3½) பயிர்வகைகளும் எல்லை கிழக்கு: சவிரிமுத்து குரிசுமுத்துவினுதனம், வடக்கு சுதுமலை சந்தமாதா கோவிலாதனம், மேற்கு பொன்னுத்துரை பெண் சுகிர்தம்மாவினுதனம். தெற்கு எட்டடி அகல ஒழுங்கை இதடங்கலும் மேற்கெல்லைக் காணியின் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், மேற்கு ரோட்டிலிருந்து தெற்கெல்லையாகவுள்ள எட்டடி அகல ஒழுங்கையால் போக்குவரவு செய்யுமுரித்தும்.

239 ஆஸ்பத்திரி வீதி இ.சு. தர்மரத்தினம்

யாழ்ப்பாணம் கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

எம். 412 20—2—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வைத்திலிங்கம் சுப்பிரமணியம், 17/1, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். —வழக்காளி

இல M B 7920

எதிராக

தம்புத்துரை கைம்பெண் ரோசம்மா, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7920ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ பங்குனி மீ 9-ந் திகதி (9-3-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6229/-ம் 8-1-66 தொடக்கம் 14-10-67 வரைக்கும ரூபாய் 4252/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5வீத வட்டியும் கோட்டுசசெலவு ரூபாய் 549-12 இதல் ரூபா 2250/- எதிராளியால் கொடுபட்டுளது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை 'நீலதுட்டித் தறையும் டேவிற் ரோட்டும்'' நில. பர. இரண்டும் (2) டிட் நில பர. ¼யும டிட் நில. பர. ½யும் (மொத்தமாக (மூன்று) நிலப்பரப்புகள்) இதிலுள்ள கல்வீடும். குசினியும் கிணறும செய்பயிர்களும் எல்லை கிழக்கு மனுவேலபிள்ளை பிரான்சிஸ் சேவியருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்கு சுவாம்பிள்ளை கைம்பெண் மேரியின் ஆதனம், தெற்கு: வஸதியாம்பிள்ளை கைம்பெண் மெணிக்கம்மாவின் ஆதனம் இதடங்கலும்

239, ஆஸ்பத்திரிவீதி, இ. சு. தர்மரத்தினம

யாழ்ப்பாணம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

எம். 413 20—270

## புதிய மேயர் தெரிவு செய்யப்பெற்றார்

மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ டி. சுந்தரம தலைமையில் மேயர் தெரிவு 16-2-70 திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு ஆரம்பமானது. திரு துரைராசாவின் பெயரை திரு என் அந்தோனிப்பிள்ளை பிரேரிக்க முன்னாள் மேயர் திரு எஸ் நாகராசா அனுவதித்தனர். வேறு பெயர் எதுவும் பிரேரிக்கப்படாததால் திரு. துரைராசாவே மேயராகத் தெரிவு செய்யப்பெற்றனரென திரு. சுந்தரம் தெரிவித்தனர். மேயர் பதவிக்கு திரு. துரைராசா புதியவரல்லர்' அப்பதவியில் பல வருட காலம் கடமையாற்றி அனுபவம் பெற்றவர். மாநகரசபை உறுப்பினர்கள் கட்சி பேதங்களை மறந்து நகரின் நலனைக் கருதி கடமையாற்றுவார்களாக; புதுமேயருக்குத் தங்கள் ஒத்துழைப்பை நல்குவார்களாக.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, க. செ. த. செ. செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-67 முதல் 31-3-68 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 18-3-70 புதன்கிழமை முற்பகல 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிற நீங்கலாக மிகுதி மேற்படி கடையில பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்,

C. Ragunathan

வண்ணார்பண்ணை 10-1-70 கொமிஷனர்

எம். 414 13-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. நாகலிங்கம கனகரத்தினமும மனைவி
2. இராசம்மபிகை இருவரும். அரசடி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

இல: M B 9268

எதிராக

1. சின்னப்பு கதிர்காமநாதனும மனைவி
2. நானமணி இருவரும், சோதுவேமபு, மானிப்பாய்.

—எதிராளிகள்

இவ் வழக்கில சேர்க்கப்பட்டவர்கள்:

1. வேலாயுதபிள்ளை செல்லத்துரையும மனைவி
2. செல்லம்மா இருவரும மானிப்பாய்
3. சின்னத்தம்பி அரிச்சந்திரனும மனைவி
4. செல்வபாக்கியம், இருவரும் குப்பிளான்
5. கோவிந்தபிள்ளை தமபிமுத்து, வாசி குப்பிளான்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9268 இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஞூ பங்குனி மீ 20-ம் திகதி (20—3—70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 7071/- 25-7-67 தொடக்கம் 19-1-69 வரைக்கும் ரூபா 5000/- வருடமொன்றுக்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 487-59 சதம இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1300/- — 11-6-64, ரூபா 350/- 19-2-67 ரூபா 1000/- 19-1-69

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை 'தளக்குளி வயல் தளக்குளி'' இத்துடன் மறு பகுதிகளும், (முன் இரு துண்டாயிருந்த லாச்சம 10 5/8 நெல் பரப்பும், லாச்சம் 40 நெல் பரப்பும 6 5/8 குழியும்)தற்போது ஒரு துண்டாயிருக்கும் நெல் பரப்பு லாச்சம் 51ம் 2, 1/8 குழியும். ஆனல் 1963ம் ஆண்டு வைகாசி மாத 25ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா சி. முத்துக்குமாரசாமி அவர்களால் அளந்து பின் தயாரிக்கப்பட்ட படம் இலக்கம் 2176ம் படத்தால் கண்டுகொண்ட நெற்பரப்பு 50ம், இதற்குரிய இரண்டு கிணறுகளும், கிழக்கு எல்லையில் இருக்கும் இன்னொரு கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு தி. முத்துக்குமாருவின் ஆதனம், வடக்கு: ம. கந்தையா, ஆ. வி. ஆறுமுகத்தினதும், வண்ணார்பண்ணை சிவன்கோவிலுக்குரிய ஆதனங்கள், மேற்கு: த. இராசையா, இ. தம்பிராஜா, க. நவசிவாயகத்தார்களுடைய ஆதனங்கள், தெற்கு: ச. தில்லையம்பலத்தாருடைய ஆதனமும. மேற்கு: ரோட்டும.

சி. செ. பாலசிங்கம்

அராலி வடக்கு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

வட்டுக்கோட்டை; 8-2-70 [எம். 407 20—2—70]

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ம் நம்பர் கடையில் திரு கா ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஞூ ஜனவரி (தை) மாதம் 1-ம் திகதி (1-1-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில 19-3-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை, 1970-ம் ஞூ மார்ச் (பங்குனி) மீ 21-ம௳ (21-3-70) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தல் விறகப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,

"இராசகிரி" ஏல விற்பனவாளர்.

643, காங்கேசன் துறைவீதி, கொமிஷனரு விலைமதிப்பாளரும்.

யாழ்ப்பாணம். 13-2-70 எம 421, 20. 27-2-70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

கோக்குவில மேற்கு, ஆனைக்கோட்டை ரோட், திரு. பொ செ. அப்பையா, திரு. செ. வீ. கனகசபை ஆகிய இவர்களிடம் 1-1-69 திகதிக்கு முன வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970ம ஞூ மார்ச் (பங்குனி) மீ 11-ம் திகதி (11-3-70) புதன்கிழமை முறையே ஒன்பது, பத்து மணிதொடக்கம் தொடர்ச்சியாக அவரவர் அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,

"இராச கிரி" ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்

643, காங்கேசன் துறைவீதி, Commissioner Sales & Valuer

யாழ்ப்பாணம். 13-2-70. எம 423 20, 27—270

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 20—2—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்